# <u>மொழி மக்களின் விழி</u>

இன்றைய நமது நாட்டின் நிலை, ஒருசில அவசரக்கார, ஆத்திரக்கார, அதிகார வெறி கொண்ட, பதவி மோகம் பிடித்த, ஆணவம் கொண்ட, ... அரசியல்வாதிகளின் கையில் அகப்பட்டு அவதிப்படும் அவல நிலையேயாகும். அதிலும், உலக வரலாற்றில் எதிர்பாராத சூழலில் இமயம் முதல் குமரி வரை பரந்துபட்ட ஒரு பெரிய நிலப்பரப்பு 'இந்தியா' என்றோர் நாடாயிற்று. இந்நிலப் பரப்பு (56) ஐம்பத்தாறு முதல் நூற்றெட்டு (108) நாடுகளாகவும்; ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிற்றரசுகளாகவுமே விளங்கி வந்திட்டது. எனவேதான், இந்த இருபதாம் நூற்றாண்டில் 'இந்தியா' என்றோர் நாடு உருவாக்கப்பட்டும் 'இந்தியர்' என்றோர் இன உணர்வு உருவாகாமலேயே போய்விட்டது. அதாவது, **நாட்டை உருவாக்க முடிவது போல்; மக்களின் உணர்வைப் புதிதாக உருவாக்க முடியாது.**

அதேபோல், ஒரு வட்டார மக்களின் மொழியான இந்தி மொழியை இந்தியாவில் உள்ள எல்லா மக்களும் தங்களுடைய மொழியாக ஏற்றுக் கொள்ள வைக்கும் முயற்சியும் மாபெருந் தோல்வியாகவே முடிந்திருக்கின்றது. தன்மான உணர்வும், தாய்மொழிப் பற்றும் உள்ள எந்தப் பகுதியினரும் தங்களுக்கு அன்னியமான இந்தி மொழியை ஏற்றுக் கொள்ளவே மாட்டார்கள். அதுமட்டுமல்ல, **இந்தி மொழி** **(Hindi Language) வளர்ச்சியடையாத, கரடுமுரடான, சொல் வளமற்ற ஒரு மொழி** என்பதால்; அது பிற மொழிகளைச் சிதைக்கவும், கொன்று தின்று ஏப்பம் விடவும் செய்யக் கூடிய ஒன்றாக இருப்பதால்; <u>விவரமறிந்த எந்த மொழியினரும் இந்தியைப் படிக்கவே மாட்டார்கள். இந்தி மொழியைப் பேசுவதே ஒரு மொழியாளரின் ஒலிநயத்தைப் பெருமளவில் பாதித்திடும்.</u> எனவே, இந்தி

மொழியை அரசியல் மொழியாக்கி; அதைப் பிற மொழியினரின் மீது திணிப்பது இந்தியாவைத் துண்டு துண்டாகச் சிதறடிக்கும். இந்தி மொழியினருக்கும், பிற மொழியினருக்கும் ஒரு மாபெரும் உள்நாட்டுப் போர் ஏற்பட்டு ஏராளமான உயிர்ச் சேதமும், பொருட் சேதமும் ஏற்படும். ஒரு வேளை, இந்த உள்நாட்டுப் போரில் இந்தியா என்ற ஒரு நாடே இல்லாமல் போனாலும் போகலாம்.

இந்த வருங்கால வரலாற்றுப் பேருண்மையை எம்மைப் போன்ற எண்ணற்றோர் தொடர்ந்து வலியுறுத்தியும்; இந்திய அரசியல்வாதிகள் உணரவும், ஒப்புக் கொள்ளவும், நம்பவும் மறுத்து வருகிறார்கள். இதனால் இந்தியாவிற்குப் பேரழிவும், பேரிழிவும்தான் ஏற்படும். இதைத் தவிர்க்க, அமைதியான முறையில் இந்தியாவில் உள்ள எல்லா மொழிகளையும் அரசாங்க ஆட்சிமொழியாக (Government Administrative Language) ஆக்கிடும் பணி நிறைவேற்றப்படல் வேண்டும். இன்றைய இந்தி வெறியர்களும், அரசியல்வாதிகளும் தங்களின் போக்கில் தொடர்ந்து செயல்பட்டால் இந்தியா துண்டு துண்டாகச் சிதறியே தீரும்.

நம்மைப் பொறுத்தவரை இந்தியா ஒரே நாடாக, ஒரு கூட்டாட்சி அரசாக [United States of India] இருந்தே தீர வேண்டும் என்ற கொள்கைதான். ஆனால், இந்தியா கூட்டாக, ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்ற கொள்கையைக் குறிப்பாக இந்தி வெறியர்களும் (The Hindi Fanatics), வட இந்திய ஆதிக்கவெறி பிடித்த அரசியல்வாதிகளும் (The North Indian Power-mongering Fanatic and Fascist Politicians) தவறாகப் பயன்படுத்திக் குழப்பங்களை விளைவித்துப் பிற மொழியினருக்கும், மாநிலத்தவருக்கும் அநீதிகளையும், கொடுமைகளையும் செய்து வருகிறார்கள். இதைக் கண்டித்துத் திருத்தும் துணிவும், நேர்மையும் உடைய அரசியல்வாதிகள் இன்னும் ஆட்சி பீடம் ஏறவில்லை. விரைவில் அத்தகைய கருத்தும், ஆற்றலும் உடையவர்கள் இந்தியத் துணைக்கண்ட அரசியலில்

தலைமை தாங்கிடும் நற்காலம் வந்தே தீரும். இல்லாவிட்டால், அமெரிக்காவைப் போல், 'வடக்கு', 'தெற்கு' என்ற மாபெரும் பிரிவினைக்காக உள்நாட்டுப் போர் நிகழ்ந்தே தீரும்; ... நிகழ்த்தப்பட்டே தீரும். அதைத் தவிர்க்க, தடுக்க .... நம்மாலான முயற்சிகள் திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

நண்ப! **மொழிதான் ஒரு வட்டார மக்களின் அல்லது ஓர் இன மக்களின் உயிர்நாடி. அதுதான் அகப்பண்பாட்டையும், புற நாகரிகத்தையும் கருவாகக் கொண்டு உருவாக வளர்த்துக் காத்துத் தருவது.** "மொழி மக்களின் விழி" என்ற பேருண்மையினை உணராத இனத்தினர்; தங்களது தாய்மொழியைப் பிற மொழியினருக்கு அடிமைப்படுத்துபவர்களாக, காட்டிக் கொடுப்பவர்களாக மாறி இறுதியில் அதன் அழிவுக்கும் காரணமாவார்கள். "ஓர் இனத்தின் வரலாறே அதனுடைய தாய்மொழியில்தான் அடங்கியிருக்கிறது", "ஓர் இனத்தின் வாழ்வும், அழிவும் அதனுடைய தாய்மொழியின் வளர்ச்சியிலும், மலர்ச்சியிலும், செழுச்சியிலும்தான் அடங்கியிருக்கிறது"; எனவேதான், நாம் பிறமொழியை அடிமைப்படுத்தவோ, நலிவுபடுத்தவோ, இழிவுபடுத்தவோ முற்படவில்லை. எல்லா மொழிகளும் சமய மொழிகளாகப் (Religious Language) பயன்படல் வேண்டுமென்ற பொதுமைக் கருத்தே நமது புரட்சிக் கருத்து.

இருப்பினும், **பதினெண்சித்தர்களின் மொழி 'தமிழ்மொழி', 'விண்வெளியில் உள்ள அண்டங்களில் வாழுகின்றவர்கள் பேசுகின்ற மொழி தமிழ்மொழி', 'உயிரை உணர, வெளிப்படுத்த; கூடுவிட்டுக் கூடு பாய; அத்திறங்களை ஓச்ச; தொலைதூரங்களுக்கு ஆற்றலைச் செலுத்த; மானுட உடலில் மருந்துக்குக் கட்டுப்படாத நோய்களை நலப்படுத்த; இயற்கையைக் கட்டுப்படுத்தி ஆணைவழிச் செயல்படச் செய்ய; முற்பிறப்பு, மறுபிறப்புக்களை அறிய; பிறவாமை நிலையும் (= உயிர்ச்சித்தி), இறவாமை நிலையும் (= உயிருடல் சித்தி) பெற்றிட; உடலைக் காயகல்பம் செய்ய; எல்லாப் பொருள்களிலும் இறையாற்றல் ஊற்றெடுக்கச் செய்ய [மந்திர, எந்திர, தந்தர, தாந்தர, தாந்தரீக, ...**

**முதலிய பல கலைகள்]; இனந்தெரியாத அச்ச, இச்சை, ஏக்க, வருத்த ,,, உணர்வுகளுக்குத் தீர்வு காண; ... நமது தாய்மொழிதான் உலக அளவில் கணக்கற்ற கோடி ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகின்றது.**

இருப்பினும், உலகின் வேறுபகுதிகளில் சிறந்த அருளாளர்கள் தங்களின் தாய்மொழியைப் பயன்படுத்தித்தான் அருளாட்சி செய்து சென்றுர்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆனுல், எமது முன்னேர்கள் இந்த எண்ணத்தை ஏற்கனவே கடந்த இரண்டு நூற்ருண்டுகளாக ஆராய்ச்சிக்குரியதாக்கி விட்டார்கள். அதன் பயனுக, **"இந்த உலகிலுள்ள 'அருள் மொழிகள்', 'கடவுள் மொழிகள்', 'தெய்வீக மொழிகள்', 'சமய மொழிகள்' ... முதலியவை அனைத்தும் தமிழ்மொழியின் அடிப்படையில் தோன்றியவைதான்...."** என்ற பேருண்மை கண்டுபிடிக்கப்பட்டது. இதுபற்றி என் தந்தை பல நூல்கள் எழுதியுள்ளார்.

நானும், பலமொழிக்குரிய தெய்வீகக் கலைஞர்களுடன் (Mystics), முனிவர்களுடன் (Saints and Sages), அருளாளர்களுடன் (Divinators), மந்திறவாதிகளுடன் (Magicians), சூன்யக்காரர்களுடன் (experts in the art of Sorcery), மைவேலைக்காரர்களுடன் (experts in the Black Art), பேய்க்கலை வல்லார்களுடன் (Witchcraft) ... பழகி இருக்கின்றேன் ஆதலால்; "இந்தச் 'சமயத்துறை மொழிகளின் அடிப்படை ஒலிகள்' [the fundamental phonemes of the religious languages] அனைத்துமே தமிழ்மொழியின் எழுத்துக்களுக்கே உரியனவாகத்தான் இருக்கின்றன" என்ற கருத்தை ஒப்புக் கொள்ளுகின்றேன்.

... ... ... ...

**//1980இல் பத்தாவது இ.ம.இ. மாநாட்டின் போது வெளியிட்ட மலரில் குருதேவர் வழங்கிய வாசகங்கள்.//**

# <u>இந்தி மொழி பற்றிய கொள்கை விளக்கம்</u>

1-12-1956இல் இ.ம.இ.யின் பாரம்பரிய மரபுப்படி இதன் இரண்டாவது தலைவராக 1936 முதல் பொறுப்பேற்றுச் செயலாற்றி வரும் சித்தர் காகபுசுண்டர் எனும் காக்கையர் ம. பழனிச்சாமி பிள்ளையாகிய யாம் மிகத் தெளிவாகவும், விளக்கமாகவும் இந்தி மொழி (Hindi Language) பற்றிய இ.ம.இ.யின் கொள்கையை எழுதி வெளியிடுகிறோம். இந்த அறிக்கை சில ஆயிரமே அச்சிடப்பட்டாலும் இது உலகெங்குமுள்ள தமிழர் அனைவருக்கும் அனுப்பப்படுகிறது என்பதே இதன் சிறப்பு.

எமது நண்பர்களும், எம்பால் ஈடுபாடு உள்ளவர்களும் இந்திய அரசின் வெறிபிடித்த இந்தி மொழிக் கொள்கையைப் பற்றிப் பலவிதமாகப் பலமுறை என்னிடம் கேட்டதாலேயே இந்த 'இ.ம.இ.யின் இந்தி மொழி பற்றிய கொள்கை விளக்கம்' என்ற அறிக்கை வெளியிடப்படுகிறது. இதனை, பல்வேறு காரணங்களால், யாம், ஐந்தாம் பதிப்பாக வெளியிட்ட 'தமிழினத் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாவது ஏன்?' என்ற நூலோடு சேர்த்து வெளியிட முடியவில்லை. ஆனாலும், இந்த அறிக்கை அவசர அவசரமாக வெளியிடப்பட்டு; இந்த 'தமிழினத் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாவது ஏன்?' என்ற நூலோடு சேர்த்து அனுப்பப்படுகிறது.

இந்த கலியுகம் பிறந்து 1359 ஆண்டுகள் கழித்தே பதினெண் சித்தர்களின் சாதனைகளுக்கும், போதனைகளுக்கும் சோதனையாகப் பிறமண்ணினரான பிருமணர்கள் இமயமலையிலுள்ள கைபர், போலன் கணவாய்கள் வழியாகத் தோலால் செய்யப்பட்ட குடுவையும், கோவணமும், கோலுமாக இந்தியாவிற்குள் வந்தார்கள். <u>இவர்களுடைய காட்டுமிராண்டி நிலைகளை மாற்றிடுவதற்காகவே பதினெண்சித்தர்கள்</u>

இவர்களுடைய எழுத்தற்றப் பேச்சு மொழியைத் தமிழுக்குச் சமமாகத் **தமிழின் அடிப்படையில் சமசுக்கிருத மொழியாக** உருவாக்கிக் கொடுத்தார்கள். அதாவது, தமிழிலுள்ள 'சமம்' என்ற சொல்லையும், வடஆரியர்களின் பேச்சு வழக்கு மொழியில் இருந்த '*கிருதம்*' என்ற சொல்லையும் இணைத்தே இந்தச் '*சமசுக்கிருதம்*' என்ற சொல் உருவாக்கப்பட்டது. அதாவது, சமம் = தமிழுக்குச் சமமாக; கிருதம் = செய்யப்பட்டது ==> **சமசுக்கிருதம்** என்ற பொருளுடைய சொல் உருவாக்கப்பட்டது.

ஆனால், இந்தச் சூழ்ச்சிக்காரப் பிருமணர்கள்; தங்களுடைய குள்ள நரிப் பண்பிற்கேற்ப; பதினெண்சித்தர்கள் படைத்துக் கொடுத்த சமசுக்கிருத மொழியைப் பயன்படுத்தியே பதினெண்சித்தர்களின் தாய்மொழியான, 'அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழி'யான தெய்வீக ஆற்றல் மிகுந்த அமுதத் தமிழ்மொழியை கரையானையும்; செல்லுப் பூச்சியையும், அந்துப் பூச்சியையும் போல் சிறுகச் சிறுக அழித்துச் சீரழித்து விட்டார்கள். அது கண்ட பதினெண்சித்தர்கள் கோபித்துச் சாபம் இட்ட காரணத்தால் செத்துப் (இறந்து, அழிந்து) போய்விட்டது இந்தச் சமசுக்கிருதம்.

ஆனாலும், இந்தக் கட்டுப்பாடும், நுட்ப மதியும், திட்டமிட்டுச் செயலாற்றும் போராற்றலும், எதையும் இனநலனுக்காகத் தியாகம் செய்யும் தீரமும், அநாகரீகமிக்க வெறிப் போக்கும் மிகுதியாக உடைய பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரியர்கள் தங்களுடைய செத்துப் போன சமசுக்கிருத மொழியை வைத்துக் கொண்டே தமிழர்களையும்; தமிழர் மதமான மெய்யான இந்து மதத்தையும்; தூய்மையும் வாய்மையும் மிக்க தமிழ் மொழியின் இலக்கிய இலக்கணங்களையும் சிதைத்தும், சீரழித்தும், பிரித்தும், அடக்கியொடுக்கி அடிமைப்படுத்தி வருகிறார்கள். ஆனால், **தமிழர்களிலேயே கணிசமான அளவு அடிமைப் புத்தி படைத்த பேராசைக்காரர்களும், பண வெறியர்களும், பதவி வெறியர்களும், புகழ் வெறியர்களும் காலங்கள் தோறும் தோன்றித் தோன்றித் தமிழின நல துரோக விரோதச் செயல்களைச் செய்ததால்தான்**

இந்தச் சமசுக்கிருத மொழியும், பிருமணர்களும் தொடர்ந்து வெற்றி பெற்று வருகிருர்கள்.

அதாவது, தமிழர்களுக்குள்ளேயே கணிசமான அளவினர்கள் தமிழின நலத் துரோக விரோதச் செயல்களை சுயநலத்தால் தொடர்ந்து செய்து வருவதால்தான் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதி ஆற்றங்கரைக் கருவூரார் அவர்களும்; பதிேனாராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களும் தோல்விகளையே பெற்றிட்டார்கள். அதாவது, இந்தச் சமசுக்கிருத மொழியால்தான் தமிழர்கள் சமுதாயரீதியாகவும், சமயரீதியாகவும் அடிமையாக்கப் பட்டிருக்கிருர்கள் [The Sanskrit language is the main cause and source for the slavery of the Tamils both in the field of Religion and Social conditions] என்பதுதான் உண்மை.

எனவே, இப்போது வடநாட்டுக் காரர்களால் அரசியல்ரீதியாகப் புகுத்தப்பட்டு வரும் இந்திமொழியால் தமிழர்கள் என்றென்றும் அரசியல் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் வடநாட்டாரிடம் நிரந்தரமான அடிமைகளாகத்தான் இருக்க நேரிடும். இன்றுள்ள காங்கிரசுக் கட்சிக்காரர்கள்; தங்களுடைய புகழ் வெறியாலும், பதவி வெறியாலும், கட்சி வெறியாலும் கண்ணை மூடிக் கொண்டு இந்திமொழியை வரவேற்கிருர்கள். இவர்களை எண்ணும் போது; பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியான குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்களின் வளர்ப்பு மகனுன ஈசா எனும் ஏசுநாதரின் கடைசிக்கால நிலையில்தான் இருக்க முடிகின்றது எம்மால்.

அதாவது, ஏசுநாதர் தனது சாவின் கடைசி நிலையில் தன்னுடைய மரணத்துக்குக் காரணமாக இருந்த அனைவரையும் மன்னிக்க விரும்பி; "தந்தையே! எல்லாம் வல்ல இறைவனுன உமது புதல்வனுகத் தோன்றிய என்னைப் புரிந்து கொள்ளாமல் இவர்கள் செய்கின்ற

பாவங்களை மன்னிப்பீராக! என்னைக் கொடுமைப் படுத்தியவர்களைத் தண்டித்துவிட வேண்டாம்" என்று வேண்டுகோள் விடுத்துக் கொண்டார்.

அதைப் போலவே, யாம் வருங்காலத் தமிழின மக்களை:

"இந்தக் காங்கிரசுக் காரர்களை மன்னித்து விடுங்கள். இவர்கள், தாங்கள் என்ன செய்கிறோம் என்றே தெரியாமல்; தமிழகத்துக்குரிய திருப்பதி, தேவிகுளம், பீர்மேடு, கன்னியாகுமரி (நாகர்கோயில்) மாவட்டப் பகுதிகள், சேலம் மாவட்ட ஓசூர் பகுதிகள் ...... முதலிய பலவற்றைப் பிற மாநிலங்களுக்குத் தானமாக வழங்கி விட்டார்கள். இவர்கள், தமிழ்மொழியையும், கல்வி கற்கும் இளைஞர்களின் அறிவையும், தமிழரின் தன்மானத்தையும், தமிழ்நாட்டையும் இந்திமொழியால் சிதைத்துச் சீரழித்துச் சின்னபின்னப் படுத்தி அடிமை நிலைக்குக் கொண்டு செல்கிறார்கள்.

இந்திமொழியை ஆட்சி மொழியாக ஒப்புக் கொண்டதின் மூலம் தமிழ்நாட்டின் அனைத்து வகையான தொழில் வளங்களையும், பொருளாதார நிலைகளையும், தமிழ்நாட்டு வாணிகத்தையும் இந்திக் காரர்கள் தங்கள் விருப்பம் போல் கொள்ளையடிக்க வாய்ப்பு வசதிகளை உருவாக்கி விட்டார்கள். இவற்றால் வருங்காலத்தில் இந்திக் காரர்களின் குருதியை ஆறாக ஓடவிட்டும்; தமிழகத்தின் தெருக்கள் தோறும், ஊர்கள் தோறும் இந்திக்காரர்களின் பிணங்களை மலைமலையாகக் குவித்தும்; ஒரு கடிய கொடிய நெடிய உள்நாட்டுப் போர் நிகழ்வதற்கு வழிவகை செய்து விட்டார்கள் இந்தக் காங்கிரசுக்காரர்கள். எனவே இந்த அப்பாவிகளை, ஏமாளிகளை, கட்சிவெறி பிடித்த அடிமைப்புத்திக்காரர்களை; இனப்பற்றோ, மொழிப்பற்றோ, நாட்டுப்பற்றோ இல்லாத கோமாளிகளை; வருங்காலத் தமிழக மக்களே! மன்னித்து விடுங்கள், மன்னித்து விடுங்கள், மன்னித்து விடுங்கள்.

ஏனெனில், இந்தக் காங்கிரசுக் காரர்களில் பெரும்பாலானவர்கள் தாங்கள் என்ன செய்கிறோம் என்றே தெரியாமல் செயல்படுகின்ற நல்லவர்களாகவே இருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் இவர்களில் பெரும்பாலானவர்கள் ஏற்கெனவே பிராமண

அடிமைகளாகவும், சமசுக்கிருத அடிமைகளாகவும், பொய்யான ஹிந்துமத அடிமைகளாகவும், ஆங்கில அடிமைகளாகவும் வாழுகின்ற கோழைகளாகவும், ஏழைகளாகவும், படிப்பறிவற்ற பாமரர்களாகவும் இருக்கிருர்கள்.

எனவே, இந்தி மொழியை எதிர்ப்பதாக எண்ணிக் கொண்டு கடந்தகால, நிகழ்கால காங்கிரசுக் காரர்களேக் கண்மூடித்தனமாகத் திட்டித் தீர்த்து விமரிசனம் செய்வதில் காலத்தைக் கடத்தாதீர்கள். இந்தியை எதிர்ப்பதற்காக இந்தி மொழி பேசாத இந்திய மாநிலத்தவர் அனேவரையும் ஒன்று திரட்டுங்கள். அதன் மூலம் ஒரு கூட்டு முயற்சியை உருவாக்கி; இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தைத் திருத்தி, இந்தியாவிலுள்ள அனேத்து மொழிகளேயும் சட்டப்படி அரசியல் மொழியாக்கிடுங்கள். இந்தியாவின் மத்திய அரசு அலுவல்களில் அனேத்து மாநிலங்களுக்கும் சமமான வாய்ப்பு வசதிகளேத் தர வேண்டுமென்ற நீதியைச் சட்டமாக்குங்கள். அதன் மூலம் தேர்வு, திறமை என்ற பெயரால் குறிப்பிட்ட வகுப்பினரும், ஒரு சில மாநிலத்தினரும் மட்டுமே இந்திய மத்திய அரசில் வேலேவாய்ப்பு வசதிகளேத் துய்த்துக் கும்மாளமிடும் அநீதியைத் தடுக்க முடியும்.

இதேபோல், இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாநிலத்தினரும் அடுத்தடுத்து இந்தியக் குடியரசுத் தலேவராகவும், பிரதம மந்திரியாகவும் பதவியேற்க வேண்டுமென்ற நியதியைச் சட்டமாக்குங்கள். அதனுல், ஒரே மாநிலத்தவர் மற்ற மாநிலத்தவர்களே அடிமையாக்கிச் சுரண்டிச் சுகபோக வாழ்வு வாழும் பித்தலாட்டத்தனமான, அயோக்கியத்தனமான, காட்டுமிராண்டித்தனமான, பாசிசச் சர்வாதிகாரப் போக்கு தடுக்கப்பட்டிடும், தடுக்கப்பட்டிடும், தடுக்கப்பட்டிடும்; ஒழிக்கப்பட்டிடும், ஒழிக்கப்பட்டிடும், ஒழிக்கப்பட்டிடும்.

எனவே, **‘இந்தி மொழியை எதிர்ப்பது என்பது இந்திக்காரர்களே எதிர்ப்பதேயாகும்’** என்ற தத்துவத்தினே நன்கு தெரிந்தும், புரிந்தும், உணர்ந்துமே இந்தி எதிர்ப்புப் போராட்டங்களும், போர்களும் நிகழ்த்தப்படல் வேண்டும். அதாவது, இந்தி எதிர்ப்பு என்பது சாதாரணப் போராட்டங்களாலேயே முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிட

முடியுமா? அல்லது பெரிய பெரிய போர்களுக்குப் பிறகுதான் இந்தி எதிர்ப்பு முயற்சி நிறைவு பெற முடியுமா? என்பதைத் தமிழ்நாட்டுக் காங்கிரசுக் காரர்களும், இந்திய நாட்டுப் பிருமணர்களும், இந்தி வெறியர்களும்தான் அவசியமாகவும், அவசர அவசரமாகவும் சிந்தித்து முடிவு செய்ய வேண்டும். இல்லாவிட்டால் இந்தி எதிர்ப்புப் போராட்டம் என்பது இந்திக்காரர்களையே எதிர்க்கும் பெரும் போராகவே மாறிடும். அந்தப் போரில் அப்பாவியான, ஏமாளியான, நல்லவர்களான காங்கிரசுக் காரர்களில் பெரும்பாலானவர்களும், சூழ்ச்சிக்காரப் பிருமணர்களில் பெரும்பாலானவர்களும், சுயநலக்கார வெறியர்களான இந்திக்காரர்களில் பெரும்பாலானவர்களும் அநியாயமாக அழிய நேரிடும், அழிய நேரிடும், அழிய நேரிடும், அழிய நேரிடும்.

எனவே, ஒவ்வொரு தமிழனும் தமிழனின் தன்மானத்துக்காக, தமிழனின் தன்னம்பிக்கைக்காக, தமிழனின் ஒற்றுமைக்காக, தமிழனின் ஒருமைப்பாட்டுக்காக, தமிழனின் பண்பாட்டு விடுதலைக்காக எப்பாடுபட்டாவது இந்தியையும், சமசுக்கிருதத்தையும் எதிர்த்துப் போராடியே தீர வேண்டும். அல்லது சமசுக்கிருதப் பிருமணர்களையும், இந்திக்காரர்களையும் எதிர்த்திடும் போரில் இயங்கியேதாளுக வேண்டும்."

இந்த முடிவைத்தான் அருள் உள்ளத்தோடும், அறிவார்ந்த இரக்கச் சிந்தனையோடும் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கொள்கையாக அறிவிக்கிறோம் யாம். **தமிழனுக்கு சமசுக்கிருதமும் வேண்டாம், இந்தியும் வேண்டாம், ஆங்கிலம் ஒன்றே போதும்** - என்பதுதான் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கொள்கை. ஏனெனில், இந்துமதத்தின் மூலவர்களாகவும், காவலர்களாகவும் இருப்பவர்கள் தமிழர்களே.

**சித்தர் காகபுசுண்டர் எனும்**
**காக்கையர் ம. பழனிச்சாமி பிள்ளை,**
**முடிகணம் எனும் முடிகண்ட சோழபுரம்,**
நாள்: 1-12-1956.

**//இ.ம.இ. கொள்கை விளக்கம் என்ற அச்சிட்ட புத்தகத்தில் உள்ள கட்டுரை.//**

# <u>தாய்மொழிப் பற்றுள்ளவனே மனிதன்</u>

1) பேரன்புக்கும் பெருமதிப்பிற்கும் உரிய அருள்மிகு திருவருட்செல்வர் கொடைவள்ளல் பெரியவர் ABT மகாலிங்கம் ஐயா அவர்கள் சமூகத்திற்கு;

அடியவன், பதினெண்சித்தர் சிவசத்திப் பீடம், அருட்பணி விரிவாக்கத் திட்டத் தலைமைச் செயலாளர், அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் சித்தரடியான் நெ.சேவுகன் (காதி வசுத்திராலயம், கொட்டாம்பட்டி 625103) குருகுலத்திலிருந்து தங்களின் பதிலை அனைவருடனும் படித்து மகிழ்ந்து எங்கள் தலைவர் குருதேவர் அவர்களுக்கும், மற்ற அனைவருக்கும் தெரிவித்து மகிழ்ந்தோம்.

2) எங்களுடைய கருத்துக்களை தங்களுடைய சிந்தனைக்கு அனுப்புகிறோம். தவறுகள் இருப்பின் மன்னிக்கவும். திருத்தமும் வருத்தமும் தங்களைப் பொறுத்ததே. அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே.

... ... ... ... ...

4) ஐயா, <u>இம்மண்ணுலகம் தோன்றுவதற்கு முன்பே அண்டபேரண்டங்களில் வாழ்ந்து வரும் பதினெண்சித்தர்களின் சாதனைகளும், போதனைகளுமே இந்துமதம் எனும் சித்தர்நெறி. இன்றைய அமுதத் தமிழ்மொழி அண்டபேரண்டமாளும் பதினெண்சித்தர்களின் அருளாட்சி மொழியேயாகும். இந்த மொழியும், இந்துமதமும்தான் இம்மண்ணுலகில் உள்ள மதங்களுக்கும், மொழிகளுக்கும் தாய்</u>; புரியலாம், தெரியலாம், உணரலாம்.

... ... ... ...

6) பெரியீர்! இம்மண்ணுலகில் உள்ள அனைத்து இனங்களிலும், தமிழினம் ஒன்றில்தான் அருளை அநுபவப் பொருளாக வழங்கக் கூடிய ஆற்றலுடையவர்கள் என்றென்றைக்கும் தோன்றிக் கொண்டே இருக்கிறார்கள். இது தமிழ்மொழி என்னும் அமுதத்தினால் விளைகின்ற அருட்பயிரே ஆகும். இந்த அருட்பயிர் விளைச்சலைத் தடுக்கவும், கெடுக்கவும்தான் சமசுக்கிருதம் என்ற கானல்நீர் (பொய்மைத் தோற்றம் நீர்) பயன்படுகிறது. எனவே, 'சமசுக்கிருதத்தை முழுமையாக அழிப்பதுதான் அருளுலகத்தைக் காப்பாற்றுவதாகும்; அருட்பயிரைப் பசுமையாக விளைவிப்பதாகும்' என்று மிகக் கடுமையாகக் கொச்சையாக குருபாரம்பரியம் கூறுகிறது.

இவைகள் அனைத்துக்கும் உரிய தனித்தனிப் பெயர்கள் அழகான இனிய எழில்மிகு தமிழ்ச் சொற்களாக இருந்தும் இவை மக்களால் தெரிய முடியாமல் போனது சமசுக்கிருத மொழியால்தான். பல நூறாயிரக்கணக்கான (பல இலட்சம்) தமிழ்ச்சொற்களும், அவற்றிற்குரிய பொருள்களும், அவற்றின் வாழ்வியல் பயன்களும் சமசுக்கிருத மொழியால்தான் கெடுக்கப்பட்டன, கொலை செய்யப்பட்டன. இதனால்தான், சமசுக்கிருத மொழியைச் சித்தர்கள் கடுமையாக எதிர்க்கிறார்கள், மறுக்கிறார்கள், வெறுக்கிறார்கள், கடுமையாக அழித்தொழிக்க விரும்புகிறார்கள். அந்நியர்களான (பிற + மண்ணினர் =>) பிராமணர் தமிழ்மொழியையும், இனத்தையும் வீழ்த்த, தாழ்த்த, ஆழ்த்த, நலிவடையச் செய்ய சமசுக்கிருத மொழியையும், அதன் இலக்கியங்களையும் ஆயுதமாக பயன்படுத்துகிறார்கள் என்பதால்; சமசுக்கிருத மொழியையும், அதன் இலக்கியத்தையும், பிராமணரையும் வேள்வியில் அவிர்ப்பலியாக அழிப்பதே சித்தர் நெறியினரின் கடமை என்று பத்தாவது (கி.மு.100 - கி.பி.150), பதினோராவது (கி.பி.785 - கி.பி.1040) பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தங்கள் குருபாரம்பரியங்களில் கூறுகிறார்கள். இது தொடர்பான குருவாசகங்கள், குருவாக்கியங்கள், குருவாக்குகள் இருக்கின்றன என்பதைத் தங்களைப் போன்றோரும் புரிந்து கொள்ள வேண்டும்.

**குறிப்பு**:- "சமசுக்கிருத மொழியில் மந்திரம் சொல்கிற எவனுவது பத்தி, சத்தி, சித்தி, முத்தி (சித்து விளையாடல் பற்றிக் கவலையில்லை) என்ற நான்கு நிலைகளில் உருப்படியாகச் செயல்பட்டிருக்கிருனு? இன்றைக்கு வரை சமசுக்கிருத மொழியோடு அருளுலகில் வாழ்வது மண்ணுல் செய்த பாவையை மணந்து இல்லற வாழ்க்கை நடத்த நினைப்பதைப் போன்றது" என்று கருவாக்கு, கருவாக்கியம், கருவாசகம், தருவாக்கு, தருவாக்கியம், தருவாசகம், திருவாக்கு, திருவாக்கியம், திருவாசகம், அருள்வாக்கு, அருள்வாக்கியம், அருள்வாசகம், மருள்வாக்கு, மருள்வாக்கியம், மருள்வாசகம் ... முதலியவைகளும் கடுமையாகக் கருத்துக் கூறுகின்றன என்கின்ற போதுதான் குரு வாக்குகளையும், குரு வாக்கியங்களையும், குரு வாசகங்களையும், குரு பாரம்பரிய வாசகங்களையும் வெறியுடையவை என்றே! கடுமையானவை, கொடுமையானவை என்றே! எங்களால் நினைக்க முடியவில்லை.

இன்னும் சொல்லப் போனுல், இன்றைய உலகில் கண்கூடாகப் பெரும்பாலான வழிபாட்டு நிலையங்கள் அருள் ஊற்றுக்கள் அடைக்கப்பட்டு, வறண்டே அனைத்து வகையான தனிமனிதப் பூசைகளும், வழிபாடுகளும், விழாக்களும் அருட்பயனைத் தர முடியாமல் இருண்டே கிடக்கின்றன. இன்னும் சொல்லப் போனுல், பிணமாகவே உள்ளன. இவற்றிற்கெல்லாம் காரணமாக இருக்கின்ற பிருமணர்களின் தாசராகவே தாங்கள் இருக்கின்றீர்கள். இது போல்தான் காலங்கள் தோறும் தலைவர்கள், பெரிய மனிதர்கள் ... பிருமண தாசர்களாக வாழ்ந்து அருளுலகையே இருளச் செய்துவிட்டனர், வறட்சி பெறச் செய்துவிட்டனர், வறுமை பெறச் செய்துவிட்டனர். இவற்ருல் எங்களைப் போன்ருேர் பொறுமையிழந்து வெறுப்பும் வெறியும் கொண்டு குருதிப் புரட்சிக்கே ஆத்தாள் அண்டமாளும் தேவி அருளாட்சித் தலைவி வீரமாகாளி, வெல்போர்க் கொற்றவை, இராகுகாலக் கொற்றவை, கபாலீசுவரி ... முதலியவர்களுக்கு குருதி முழுக்காட்டவும்; குருதி அவிர்ப்பலி

வழங்கவும்; குருதிப் படையலைப் படைக்கவும் தயாராக நேரிட்டு விட்டது!

இமயத்தின் முகடு முதல் கன்னியாகுமரி முனை வரை சமசுக்கிருத மறுப்பும், பிருமண வெறுப்பும்; நிர்வாணத் துறவிகளின் சத்தியாக, கபாலிகர்களின் சத்தியாக, சத்தி வழிபாட்டினரின் சத்தியாக வளர்ந்து விட்டது! வளர்ந்து விட்டது! வளர்ந்து விட்டது! எனவே, அன்பு கூர்ந்து தங்களைப் போன்றோர் பிருமண தாச நிலைகளை (பிருமண அடிமை நிலைகளை), சமசுக்கிருத பத்தி நிலைகளை மாற்றிக் கொள்வது நல்லது! நல்லது! நல்லது! இது தங்களின்பால் உள்ள மதிப்பாலும், அன்பாலும் விடுக்கப்படும் வேண்டுகோள்.

7) ஐயா, **தாங்கள் பல மொழிகளைக் கற்றுக் கொண்டால் நல்லது என்று கூறியிருக்கிறீர்கள். இதனை பத்தாவது, பதினோராவது பதினெண்சித்தர்களின் குருபாரம்பரிய வாசகம் கடுமையாக மறுக்கிறது,** வெறுக்கிறது. "தாய்மொழியைத் தவிர தொழில் மொழியாக ஒரே ஒரு மொழியைக் கற்றாலும் கூட அவனுடைய சிந்தையும், நெஞ்சமும் கூலி உணர்வும், போலி உணர்வும், அடிமை உணர்வும், காசுக்காக எதையும் விற்கும் வியாபார உணர்வும், துரோக உணர்வும், விரோத உணர்வும் ... மிகுந்த ஒன்றாகவே மாறிவிடும். காசுக்காக உடலை விற்கும் பொருட்பெண்டிரை விட; அப் பொருட்பெண்டிரை வைத்து வயிறு வளர்க்கும் (மாமா வேலை பார்ப்பவன்) ஈனப் பிறவிகளை விட கேடு கெட்டவனே **இரு மொழிகளுக்கு மேல் வாழ்க்கையில் ஏற்றுக் கொள்பவன்....**" (இதற்கு மேல் பச்சையான, கொச்சையான வாசகங்கள் இருப்பதால் எழுதவில்லை.)

இதைத் தாங்கள் எப்படி எடுத்துக் கொண்டாலும் சரி; இதை அறிவுலகம் எப்படி ஏற்றுக்கொண்டாலும் சரி; நாங்கள் பதினெண்சித்தர்களின் கருத்துப்படி **"தாய்மொழிப் பற்றுள்ளவனே மனிதன்; இவனே தன்னலம் இன்றி என்றென்றும் பொதுநலம்**

**பேணும் மேலோனாக உயர்பவன். இவனே அந்தணன். இவனே நாற்பத்தெட்டு வகையான வழிபாட்டுநிலைய ஊழியக்காரனாகச் சிறக்க முடியும்...”** என்ற குருபாரம்பரிய முறைப்படிதான் வாழுகிறோம்.

8) பதினெண்சித்தர்களின் இந்துமதம் எனப்படும் சித்தர்நெறி இன விடுதலைகள், மொழி விடுதலைகள், இன உரிமைகள், இனச் சமத்துவங்கள், மொழிச் சமத்துவங்கள் ... என்ற சொற்களைத்தான் அதிகமாகக் கையாண்டிருக்கிறது என்பதால்; நாங்கள் உலகில் உள்ள அனைத்து மொழிகளுமே, அனைத்து இனங்களுமே தனித்தன்மையோடு அவரவர்க்குரிய உரிமையோடும், பெருமையோடும் வாழுவதைத்தான் விரும்புகின்றோமே தவிர; மொழி ஆதிக்கத்தையோ, இன ஆதிக்கத்தையோ, மொழிச் சுரண்டலையோ, இனச் சுரண்டலையோ ஏற்க இயலாது, ஒப்புக்கொள்ள இயலாது, அநுமதிக்கக் கூடாது.

... ... ... ... ...

சமசுக்கிருதப் பொய்களிலும், கற்பனைகளிலும், கனவுகளிலும் இருந்து பதினெண்சித்தர்களின் உண்மையான இந்துமதம் விடுவிக்கப்பட்டே தீரும். விரைவில் பிருமண மாயைகளை, சூழ்ச்சிகளை, சுரண்டல்களை, ஏமாற்றுக்களை, திரிபுவாதங்களை, ... முழுமையாக எதிர்த்து முறியடிக்கும் அருட்பணி துவங்கும்! துவங்கும்! துவங்கும்! இன்றைய தமிழகத்தில் அருட்செல்வர் என்ற பெயரில் வாழும் தங்களுக்கு இவ்வறிவிப்பினை வழங்கக் கடமைப்பட்டிருக்கிறோம். தாங்கள் புரிந்தால் புரிந்து, உணர்ந்தால் உணர்ந்து செயல்படலாம்.

... .... ... ...

அன்புகூர்ந்து தங்களைப் புண்படுத்துகிற நோக்கோ போக்கோ ஊசிமுனையளவு கூட எங்களுக்கு இல்லை! இல்லை! இல்லை! ஏனெனில், இம்மண்ணுலகில் உள்ள தமிழர்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவினர்களிடம் கூட வீரமும், தீரமும், உரமும்,

தரமும் உடைய தமிழ்மொழிப் பற்றோ! நாட்டுப் பற்றோ! இனப் பற்றோ! இருக்கிறதா? என்பது ஆராய்ச்சிக்குரியதாகவே இருக்கிறது. அதாவது, கோழையின் கையில் வாளாக பல அப்பாவித் தமிழர்களின் நெஞ்சத்தில் தமிழ்மொழி உணர்வு, தமிழின உணர்வு, தமிழ்நாட்டு உணர்வு என்ற மூன்றும் அடங்கிக் கிடக்கிறது. இதற்கு என்ன செய்வது?

**குறிப்பு**:- ஐயா! இந்தச் சிந்தனைகளால்தான் தங்களைப் போன்ற அருட்செல்வர்கள் பலர் இருக்கையில் நாங்கள் எங்களுடைய அனைத்துத் தத்துவங்களையும், சித்தாந்தங்களையும் தனித்தே செயல்படுத்துகிறோம். உண்மையான தமிழுணர்வு, நாட்டுணர்வு, இனவுணர்வு பெற்றிருந்த காலஞ்சென்ற தமிழினத் தலைவர், சிறைக்கஞ்சாச் சிங்கம், பகுத்தறிவுப் பகலவன், சீர்திருத்தப் பாசறை, தன்னலமில்லா பொதுத்தொண்டு ஆற்றிய மாவீரர், வைக்கம் வீரர், சுயமரியாதை இயக்கம் கண்ட தன்மானத் தங்கம் பெரியார் ஈ.வெ.ரா. அவர்களை எங்களுடைய இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கௌரவத் தலைவராக ஏற்றுச் செயல்படுகிறோம். இவற்றை நாங்கள் அனுப்பியிருக்கிற எங்களுடைய மாத ஏடான ‘குருதேவர்’ புத்தகங்கள், அறிக்கைகள், ... முதலிய அனைத்தையும் படித்தும், ஆராய்ந்தும் தெரிந்து கொள்ளுங்கள்.

... ... ... ...

அன்பே சிவம்!
ஓம் திருச்சிற்றம்பலம்.

**// தலைமைப்பீடத்திலிருந்து 03-04-1985இல் குருதேவர் எழுதிய அஞ்சல் வடிவக் கட்டுரையின் சில பகுதிகள். //**